

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஸ்டாலின் அவர்களை கைது செய்த ஷோபா மாடல் தவெக அரசை கண்டித்து அரியலூரில் சாலை மறியல் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட அனைவரையும் காவல்துறையினர் கைது செய்தனர்.



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த நடவடிக்கையை கண்டித்து கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து பேரணியை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்ட 500க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். இதில் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

*திருச்சி, ஆக. 6 -*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டத்தில் அமைதிப் பேரணி நடைபெறுகிறது என்று திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை யொட்டி, ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு அண்ணா ஸ்டேடியம் ரவுண்டானா முதல் டி.வி.எஸ். டோல்கேட் வரை அமைதி பேரணியாக சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதையை செலுத்த உள்ளோம் . அதனை தொடர்ந்து திருவெறும்பூர் தொகுதி காட்டூர் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும் மாலை அணிவிக்க உள்ளோம் .

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை, கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த நடவடிக்கையை கண்டித்து கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து பேரணியை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்ட 500க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். இதில் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதை கண்டித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை பிருந்தாவனத்தில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. நிகழ்வில் செ.அசோக்பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் தவ. பாஞ்சாலன், என்.சேட்டு, ஓ.எஸ். வெங்கடாச்சலம், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், எம்.கோவிந்தராஜன் ஆர்.ஆர்.சாமிநாதன் மற்றும் கமலா செல்வம், வி.ஜி.ஆர். மணிவண்ணன், சி.அரங்கநாயகம், சதீஷ், ஆர்.கே.தவமணி, எழில்ராஜா, கீரனூர் ஜாபர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த நடவடிக்கையை கண்டித்து கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வால்பாறை நகரக் கழகச் செயலாளர், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து பேரணியை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்ட 500க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர்.

### சட்டமன்றம் கூடுகிற நேரத்தில் – சட்டமன்ற

# எதிர்க்கட்சித் தலைவரை அவசர அவசரமாகக் கைது செய்தது நியாயமல்ல!

## கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!

*சென்னை, ஆக. 6 -*

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரை சட்டமன்றம் கூடுகின்ற இந்த நேரத்தில் அவசர அவசரமாக கைது செய்திருப்பது நியாயமல்ல என்று கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

அவதூறு வழக்குகளைப் போட்டு எதிர்க்கட்சிகளை முடக்க நினைப்பதை அரசு கைவிட வேண்டும். அவதூறு என்று முடிவு செய்கின்ற அதிகாரத்தை நீதிமன்றத்தின் முடிவுக்கு விட்டுவிட வேண்டும். தமிழக மக்கள் அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்புகளோடு நிதிநிலை அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்ற சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரை முடக்கும் விதமாக இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கக் கூடாது. நீதிமன்றம் சட்டப்படி தக்க நிவாரணத்தை கொடுக்கும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை!

*தஞ்சாவூர், ஆக. 6 -*

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் அருகே உள்ள வலையப்பேட்டை பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்த உள்ளதால் கழக நிர்வாகிகள், முன்னாடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டைக் அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : வருகின்ற 07.08.2026 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி தலைமையில் கும்பகோணம், வலையப்பேட்டை பைபாஸ் சாலையில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநில சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள். முன்னாள் இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



சட்ட பேரவை முன்னாள் உறுப்பினரும் திமுக முன்னாள் மாவட்ட அவைத்தலைவருமான மன்னை மிசா கு.பாலகிருஷ்ணன் அவர்களின் 13ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி அவரது இல்லத்திலிருந்து மாநில விவசாய அணி செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. கே.எஸ். விஜயன் தலைமையில் கு.பாலகிருஷ்ணன் அவர்களின் நினைவிடம் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. சட்டபேரவை முன்னாள் உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, தலைமை செயற்குழு உறுப்பினர் சு. ஞானசேகரன், மாவட்ட அவைத்தலைவர் க. தன்ராஜ்,நகர் மன்ற தலைவர் மன்னை த. சோழராஜன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அழகு சண்முகராஜா, நகர செயலாளர் வீரா. கணேசன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல்,நா. கவியரசு, கே.வி.கே. ஆனந்த் பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன் அரங்காவல் குழு தலைவர் சி. இளவரசன் நகர் மன்ற துணை தலைவர் கைலாசம், முன்னாள் நீடாமங்கலம் ஒன்றிய து. பெருந்தலைவர் வ. முத்துராமகிருஷ்ணன், முன்னாள் நகர் மன்ற தலைவர் கார்த்திகா உத்தமன் உள்ளிட்ட கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்றனர்.